RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1115

# மகோன்னதமான மகாகவி பாரதியின் வாழ்க்கை ஓர் ஆய்வு

**சு. சிவகாமசுந்தரி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ சங்கரா கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஏனாத்தூர், காஞ்சிபுரம்-631561, தமிழ்நாடு, இந்தியா

# A Study about the Life of the Great Mahakavi Bharathi

**S. Sivagamasundari** [a, *]

[a] Department of Tamil, Sri Sankara Arts and Science College (Autonomous), Enathur, Kancheepuram–631561, Tamil Nadu, India

* Corresponding Author: shivaniswetha@gmail.com

Received: 23-08-2021
Revised: 10-07-2022
Accepted: 16-07-2022
Published: 09-09-2022

Check for updates

## ABSTRACT

There is no doubt that the name Mahakavi Bharathi is very popular among us Tamil people and other countries today. He was a master at breaking down grammatical definitions. He is a poet of song, a guardian of reason according to the wishes of the lay people, 'Pappa paattu Bharathi to toddlers, a poet of wisdom, and a thinker who has an indelible place in the mind in the name of mundaasu kavi. Bharthi was the one who voiced emotional thoughts to all the people of the world. Bharthi means extreme confidence, and the songs of Bharthi are like a mantra. It can bind us. It is knockable. His song is in such a way that it gives confidence so that one does not give up whenever one feels tired. Bharathiyar's devotion to the Vedas and the Upanishads was well known. This nation fully knows that the Mahakavi had an unwavering devotion to God, but before such devotion took root in him, he was engaged in an atheistic argument with his grandfather and won the debate. He was equal to him in performing so many miracles. Bharti was multilingual. He also compares Tamil with other languages he knows. He enjoys thinking that his mother tongue, Tamil, is the sweetest and best language. It is the story of an incomparable poet with a sense of nationalism and social Tamilness. This article presents the ideas of lifestyle, Tamil work, social work, and women's emancipation.

**Keywords:** Mahakavi Bharathi, Wisdom, Tamil Poet, Bharathiyar Life

## முன்னுரை

பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும். என்று எழுச்சியோடு பாடியவர் மகாகவிபாரதி காலம் காலமாக ஊறிக்கிடந்த மூடநம்பிக்கைகள், சாதிஒடுக்கம், பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் தீண்டாமை போன்றவற்றுக்கெதிராக பொங்கி எழுந்த பாரதி தனது சொற்கணைகளால் அடக்கு முறைகளை உடைத்தெறிந்தவர்

இயல் ஒன்றில் பாரதியின் பிறப்பு பற்றியும் இயல் இரண்டில் பாரதியின் கல்வி முறை பற்றியும் இயல் மூன்றில் பாரதியின் வாழ்க்கை முறையமைப்பு பற்றியும் இயல் நான்கில் பாரதியின் தமிழ்ப் பணி பற்றியும் இறுதியியலில் பாரதியின் பெண் விடுதலை பற்றிய செய்திகளையும் இக்கட்டுரையில் காண முடிகிறது.

## பாரதியின் பிறப்பு

சுப்பிரமணிய பாரதியார் இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் கனல் தெறிக்கும் விடுதலைப் போர் கவிதைகள் வாயிலாக மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர். இவர் ஒரு கவிஞர் மட்டுமல்லாமல் ஒரு எழுத்தாளர். பத்திரிக்கை ஆசிரியர். சமூகச் சீர்திருத்தவாதி மற்றும் தன்னுடைய பாட்டுகளின் மூலமாக சிந்தனைகளை மக்களிடம் தட்டியெழுப்பியவர். தன் தாய்மொழியாம் தமிழ்மொழி மீது அளவுகடந்த பற்று கொண்ட இவர் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று போற்றிப் பாடியுள்ளார். விடுதலைப் போராட்டக் காலத்தில் இவருடைய தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகள் மக்களை ஒருங்கிணைத்த காரணத்தினால் "தேசியக்கவியாக" போற்றப்பட்ட மாபெரும் புரட்சி வீரனின் பிறப்பு பற்றி விரிவாகக் காண்போம் (Poompuhar Brothers, 1988).

இவருடைய இயற்பெயர் சுப்பையா என்கிற சுப்ரமண்யன். இவர் டிசம்பர் திங்கள் 11.12.1882 பிறந்த இடம் எட்டையபுரம், தமிழ்நாடு. இவருக்கு வழங்கக்கூடிய வேறுபெயர்கள் முண்டாசுக்கவிஞன், சக்திதாசன், பாரதியார், மகாகவி. இவர் வாழ்ந்த இருப்பிடம் திருவல்லிக்கேணி, சென்னை. இவருடைய பணி கவிஞர், எழுத்தாளர், விடுதலைப் போராட்டவீரர், பத்திரிக்கையாசிரியர் இவருடைய பெற்றோர் பெயர் சின்னசாமி ஐயர், இலக்குமி அம்மாள் இவரின் துணைவியார் பெயர் செல்லம்மாள். இவருக்கு இரண்டு பெண்குழந்தைகள் தங்கம்மாள், சகுந்தலா. இவரின் முக்கிய படைப்புகள் கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் இவற்றினை இயற்றிய பெருமைக்குரியவர். இவருக்கு 11வயது இருக்கும் போது இவரது கவிபாடும் ஆற்றல் கண்டு எட்டையபுர மன்னன் அவையில் இவருக்கு “பாரதி” என்ற பட்டத்தை வழங்கினார். அன்று முதல் இவரது பெயர் சுப்பிரமணிய பாரதி என்றானது (Poompuhar Brothers, 1988).

## பாரதியின் கல்வி

உலகை உயர்த்தும் கல்வி ஒடுக்குபவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் இரண்டு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய யதார்த்தமாகிய சாதி ஒடுக்குமுறையும், ஆண்களுக்கு அடங்கி நடக்கவேண்டியது பெண்களின் கடமை என்று இருபாலினத்தவரும் ஏற்றுக்கொண்டதாக இருந்தனர். இத்தகையச் சூழலைக் கல்வி மூலமாகவே மாற்றமுடியும் என்று உறுதியாக நம்பியவர் (Bharathiyar, 2007).

தாய்மொழி மூலம் கற்றல் ஆளுமையுடன் திகழ அதற்கேற்ற கல்வி, சரீரப்பயிற்சியால் வலுப்பெறும். திடமான உடலை வடிவமைக்கும் உடற்கல்வி வரலாற்று உணர்வு மிக்க, விஞ்ஞானத் தொழில் நுட்பக் கல்வி, உலகெங்கும் வளரும் மேன்மைக் கலைகளை எட்டுத் திக்கும் சென்று கற்று வருகிற கல்வி, முழுமைப் பரிமாணம் கொண்ட ஞான விருத்திக்கானக் கல்வி. இவ்வாறாக பாரதி மக்களுக்கான ஜனநாயகக் கல்வி முறையமைப்பை வென்றெடுப்பதற்கான பன்முகச் சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளார் (Vardhamanan, 2019a).

## பாரதியின் வாழ்க்கை முறையமைப்பு

“பெண்கள் அறிவை வளர்த்தால் வையம் பேதைமை யற்றிடுங் காணீர்”

என்று பாடிய பாரதிக்கு ஏழு வயது சிறுமியான செல்லம்மாளோடு 1897 இல் திருமணம் நடந்தேறியது (Bharathiyar, 2007). அப்போது பாரதிக்கு வயது பதினான்கு. அன்றைய சமூகம் இது போன்ற கொடுமைகளை பெண்களுக்கு இழைத்து வந்தது. இதைக் கண்டு பாரதி வெகுண்டெழுந்தார். இது போன்று இனியும் நடக்கக்கூடாது எனப் போராடினார். பதினான்கு வயதில் தன் தந்தையை இழந்த பாரதியார் இதன் பிறகு வறுமையில் வாடித் தவித்தார். பின்பு ஒருவாறு சிரமப்பட்டு காசிக்குச் சென்று அலகாபாத் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதம் மற்றும் இந்தி மொழிகளைக் கற்றுக் கொண்டார். ஆங்கிலம், வங்காளம் போன்ற பிற மொழிகளிலும் தேர்ச்சி பெற்றார். தன் வாழ்க்கையில் எவ்வளவு

துயரங்களைப் பாரதியார் சந்தித்தாலும் தமிழ்ப்பற்றும், தேசப்பற்றும் சமூக அக்கறையும் துளியும் குறைந்ததில்லை (Vardhamanan, 2019a).

## பாரதியின் தமிழ்ப்பணி

பாரதியார் இலக்கியங்களை ஐயம் நீங்கக் கற்று அவற்றை ஆரத்தழுவி அழகான பல கவிதைகளை உலகத்திற்குத் தந்துள்ளார். நீசக் குயிலும் நெருப்புக் குயிலும் ஆசை வார்த்தைக் காட்டி அமிழ்தூறப் பாடியதே என்று பெண்மையின் சிறப்பினை உலகிற்கு பறைசாற்றுகின்றார் (Vardhamanan, 2019b).

இவ்வாறாக இலகுநடையும் இலக்கிய நயமும் பொருள்செறிவும் உடைய புதுக்கவிதைகளாகும். தமிழ் இலக்கிய வரலாற்றில் புதுக்கவிதைகளைத் தமிழுக்கு அறிமுகம் செய்த பெருமை பாரதியையே சாரும். பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி, பெண்கள் விடுதலைக்கும்மி போன்ற பல கவிதைகளைப் பாரதியார் தமிழுக்குத் தந்துள்ளார். பகவத்கீதையைத் தமிழில் மொழிபெயர்த்தார். மேலும் எட்டயபுர அரசவையில் அரசவைக் கவிஞராகப் பணிபுரிந்து பல கவிதைகளை இயற்றினார். இவரின் எழுத்துக்கள் 1903ல் அச்சடித்து வெளியாகத் துவங்கின. அதன்பிறகு மதுரை சேதுபதிப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். பின்பு சுதந்திர போராட்ட வேட்கை மிகுந்த பாரதி பத்திரிகை மூலமாக அடிமைப்பட்டுக் கிடந்த சுதேச மக்களைத் தனது எழுத்துக்கள் மூலமாக கிளர்ந்தெழச் செய்த பெருமைக்குரியவர்.

மக்களிடையே சுதந்திர எண்ணத்தை விதைத்த பாரதி பின்வருமாறு பாடுகிறார். “அக்னிக் குஞ்சொன்று கண்டேன் அதை அங்கொரு காட்டிடை பொந்திடை வைத்தேன் வெந்து தணிந்தது காடு தழல் வீரத்தில் மூப்பென்றும், குஞ்சென்றும் உண்டோ” எனப் பாடினார் (Bharathiyar, 2007).

## பாரதியின் பெண்விடுதலை

பாரதி வாழ்ந்த காலப்பகுதியில் ஆணாதிக்கம் மேலோங்கி பெண்கள் மீதான அடக்குமுறை அதிகமாகக் காணப்பட்டது. பெண்கள் கல்வி கற்கக் கூடாது. ஆண்களுக்கு இணையாக வேலை பார்க்கக்கூடாது. சிறுவயது திருமணம், சீதனக்கொடுமைகள் இவற்றுக்கெதிராகப் பாரதி குரல் கொடுத்தார் (Vishwanathan, 1987).

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்". என்று பெண்கள் விடுதலைக்கும்மி எனும் கவிதையில் பாடினார் (Bharathiyar, 2007).

“மாதர் தம்மை இழிவு செய்யும் மடமைதனை கொளுத்துவோம்” என்று பாடியவர் (Bharathiyar, 2007).

பெண்கள் சுதந்திரமாக வாழவேண்டும். கல்வி கற்க வேண்டும். ஆண்களுக்கு இணையாக வேலை செய்ய வேண்டும். விரும்பியவர்களைத் திருமணம் செய்ய வேண்டும். என்ற கருத்துக்களைச் சமூகத்தில் வலியுறுத்தி “வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்” என்ற வரிகள் மூலமாக வெளிப்படுத்துகின்றார் (Kalpana, 2020, Vishwanathan, 1987). இதுவே பிற்காலத்தில் பாரம்பரிய சமூக மாற்றத்தையும் பெண்கள் சுதந்திரம் அடைவதற்கான “விதை" அன்று பாரதியினால் போடப்பட்டதாகும். பாரதி கண்ட புதுமைப்பெண்கள் இன்று தலைநிமிர்ந்து வாழ பாரதி அன்று போராடியிருந்தார். என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

## முடிவுரை

பாரதி எட்டயபுரத்தில் பிறந்தாலும் பல ஊர்களுக்கும் சென்று தன்னுடைய படைப்புகளை வெளியிட்ட பெருமைக்குரியவர். மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டிய சிறப்பிற்குரியவர் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ளலாம். உலகை உயர்த்தும் கல்வி முறையமைப்பை உறுதியாக நம்பியவர் பாரதியார். தாய்மொழி மூலம் கற்றல் ஆளுமையுடன் திகழ, அதற்கேற்ற கல்வி

முறையை மாற்றமுடியும் என்ற உறுதியான சிந்தனை கொண்டவர் என்பதை நாம் காணமுடிகிறது. பெண் கொடுமைகளுக்கு எதிராக நீதியை நிலை நாட்டினார். பாரதியாரின் தமிழ்ப்பணி அளப்பரியது. பல கவிதைகளைத் தமிழுக்குத் தந்துள்ளார். அடிமைப்பட்டுக் கிடந்த சுதேச மக்களைத் தனது எழுத்துக்கள் மூலமாக கிளர்ந்தெழச் செய்த பெருமைக்குரியவர் என்பதை நாம் இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. பாரதி என்ற மகோன்னதமான ஒரு கவிஞன் தான் வாழ்ந்த காலத்தில் தமிழையும் தன் தேசத்து மக்களையும் நேசித்து மக்களிடையே பகுத்தறிவினை வளர்த்து இருண்டு கிடந்த சமூகத்தில் மக்கள் வாழ்வில் தன்னுடைய எழுத்துக்களால் முத்திரைப்பதித்து முத்தாய்ப்பாக வெளிச்சம் கொடுத்து “இனி ஒரு விதி செய்வோம்” என்று பாடிய புதுமைக் கவிஞன் மக்கள் மனங்களில் நீங்கா இடம் பிடித்த கவிஞன் என்றால் அதுமிகையில்லை. பாரதி காட்டிய வழியில் நாமும் நம்தமிழையும் நம்சமூகத்தையும் நல்வழியில் வகுத்துச் செல்வோம்.

## References

Bharathiyar, (2007) Bharathiar Kavithagal, Kumaran Kumaran Pathippagam, Chennai, India.

Kalpana, B., (2020) Bharathi’s Concept of Women Liberation: Legacy and novelty, Tamil Aivu Kalanjiyam, Coimbatore, India. https://doi.org/10.34256/tak20201

Poompuhar Brothers, (1988) Mahakavi Bharathiyarin Katturaikal, Poompuhar Pathippagam, Chennai, India.

Vardhamanan, (2019a) Bharathiyar Kadhaikal, Vardhamanan Pathippagam, Chennai, India.

Vardhamanan, (2019b) Bharathiyar Vilakkum Bhagavathgeethai, Vardhamanan Pathippagam, Chennai, India.

Vishwanathan, S., (1987) Bharathi Noolgal Vivarakovai, Balaji Puthaga Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License